# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர்

பெறுநர்

கி.சந்திரசேகர், B.E,M.T.P,
உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ),
காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
பிளாட் எண்.1, வள்ளலார் தெரு,
மின் நகர் (ஸ்டேடியம் பின்புறம்)
காஞ்சிபுரம்.
msklpa3@gmail.com.
Office Phone No:044-27227937.

தனி அலுவலர் /வட்டார வளர்ச்சி
அலுவலர்,
கீழ்கதிர்பூர் ஊராட்சி,
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்,
சிறுகாவேரிபாக்கம்(இரு),
காஞ்சிபுரம்.

ந.க.எண். 942/2019/காஉதிகு

நாள். 19.02.2020

அய்யா,

பொருள்: தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிடங்கள் - காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் - காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம் - கீழ்கதிர்பூர் ஊராட்சி - கீழ்கதிர்பூர் கிராமம் - சர்வே எண்கள்.3/3A2 237/3-ல் 6.99 ஹெக்டேர் மனையிடத்தில் தரைத்தளம் + மூன்று தளங்கள் கொண்ட 33 பிளாக்குகளில் 2112 தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. நிர்வாக பொறியாளர், காஞ்சிபுரம் கோட்டம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.15/அ1/கா.கோ/2019 நாள்.22.08.2019 மற்றும் 21.11.2019.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.13573/2017/ முதி1, நாள்,28.08.2018.(நில உபயோக மாற்றம் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.)
3. அரசாணை எண்.92 Revenue Deportment Land Disposal Wing.LD5 (1) Section, dated.06.04.2017.
4. அரசாணை எண்.(2டி) எண்.7, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ.4(1)-துறை நாள்.18.01.2019.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள்.16.04.2009.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/2009 பிஏ1, நாள்.04.04.2012.
7. 87-வது காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழும கூட்ட தீர்மானம் எண்.02, நாள்.16.12.2019
8. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மீட்புப்பணி காஞ்சிபுரம், தீயணைப்பு கடிதம் ஒ.மு.எண்.11327/ஆ/2019, நாள்.22.08.2019.
9. Managing Director, Tamil Nadu Slum Clearance Board, Letter No. SCB/SP/8214/2018 Dated-20.01.2020.
10. நகர் ஊரமைப்பு இயக்குநர் சுற்றறிக்கை 4367/19 நஊ2 நாள்.31.10.2019.
11. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.22412/2019/சிபி நாள்.22.01.2020.
12. அரசாணை எண்.397, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.12.09.1996.

EXECUTIVE ENGINEER
KANCHIPURAM DIVISION
TAMIL NADU SLUM CLEARANCE BOAR
PLOT No. 1/1a20 Arangaanathan N...

13. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA1), நாள்.04.02.2019.
14. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.29.01.2020 (வளர்ச்சி கட்டணம், நன்னிலைவரி, Display Board கட்டணம் செலுத்தக் கோரியது)
15. நிர்வாக பொறியாளர், காஞ்சிபுரம் கோட்டம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் நாள்.06.02.2020 (வளர்ச்சி கட்டணம் மற்றும் நன்னிலைவரி (13.02.2020), Display Board கட்டணம் ஆகியவை செலுத்திய விவரம்).

********

**உத்தரவு.**

பார்வை 11-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதம் மூலம் பெறப்பட்ட இப்பொருள் சம்மந்தமான உத்தேசம் பார்வை 10-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு இயக்குநர் சுற்றறிக்கையின் படி பரிசீலிக்கப்பட்டு, பார்வை 7-ல் சுட்டிய 87-வது குழும கூட்டத்தில் பொருள் வைத்து தீர்மானம் எண்.02-ல் அதிகார பகிர்வு "அலுவலக குறிப்பு ஒப்பப்பட்டது" என பெறப்பட்டதை தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம் - கீழ்கதிர்பூர் ஊராட்சி - கீழ்கதிர்பூர் கிராமம் - சர்வே எண்கள்.3/3A2, 237/3-ல் 6.99 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு கட்டிட மனைக்கு **"ABCD"** என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலும் அம்மனையில்,

| | | |
|---|---|---|
| I. | மொத்த மனை பரப்பளவு | - 6.99.ஹெக்டேர் |
| | மொத்த பிளாக்குகள் | - 33 |
| | மொத்த குடியிருப்பு | - 2112 |
| II. | Typical Block – G + 3 – Floors – 33 Blocks | |
| | Ground Floor | - 528.73 -16 |
| | First Floor | - 528.73 - 16 |
| | Second Floor | - 528.73 - 16 |
| | Third Floor | - 528.73 - 16 |
| | Total | -2114.92 - 64 |
| III. | 64 x 33 Blocks | = 2112 Dewellings |
| | Site Area | - 69900.00 ச.மீ |
| | Plinth area Block (One) | - 2114.92 ச.மீ |
| | Total 33 Blocks | - 69792.36 ச.மீ |
| | Primary School | - 425.88 ச.மீ |
| | I C D S (Anganwadi-3Nos) | - 139.26 ச.மீ |
| | Ration Shop 3 Nos | - 128.46 ச.மீ |
| | Public Health Centre | - 304.37 ச.மீ |
| | Milk Booth 3 Nos | - 49.44 ச.மீ |

EXECUTIVE ENGINEER
KANCHIPURAM DIVISION
TAMIL NADU SLUM CLEARANCE BO

| | | |
|---|---|---|
| Convenient Shop 3 Nos | - | 246.66 ச.மீ |
| | | 71079.83 ச.மீ |

| | | |
|---|---|---|
| IV. OSR - 1 | - | 2351.28ச.மீ |
| OSR – 2 | - | 4647.24 ச.மீ |
| Total OSR | - | 6998.52 ச.மீ -10.01% |

தரைத்தளம் + மூன்று தளங்கள் கொண்ட 33 பிளாக்குகளில் 2112 தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட வரைபடங்களுக்கு **திட்ட அனுமதி எண்.05 அ முதல் ஒ வரை /2020 காஉதிகு** என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி சீட்டுடன் பின்வரும் நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

மேற்படி கட்டிட வரைபடத்திற்கு கட்டிட அனுமதி வழங்குமாறு தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கீழ்கதிர்பூர் ஊராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பார்வை 12 மற்றும் 13-ல் கண்ட அரசாணையின்படி நன்னிலை வரி **ரூ.2,11,500/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினோராயிரத்து ஐந்நூறு மட்டும்)** வளர்ச்சி கட்டணம் தொகை **ரூ.10,74,000/- (ரூபாய் பத்து இலட்சத்து எழுபத்தி நான்காயிரம் மட்டும்)** மற்றும் **Display Board கட்டணம் ரூ.10,000/-(ரூபாய் பத்தாயிரம் மட்டும்)** ஆகியவை செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. It is the responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant/developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
3. நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்பபத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களின் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக, விண்ண்ப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு

EXECUTIVE ENGINEER
KANCHIPURAM DIVISION
TAMIL NADU SLUM CLEARANCE BO
PLOT No: 17to20, Aranganathan Nag
Ponneri Karai, Koneri Kuppam

சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

4. தீயணைப்பு துறையின் தடையின்மை சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
5. "கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்."
6. The conditions given in the Fire NOC of fire service department, kanchipuram dated: 22.08.2019 should be followed.

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச குடியிருப்பு கட்டிட உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
9. அரசாணை எண்.341. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள.03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. கட்டப்படும் கட்டிடங்கள் வரைபடத்தில் உள்ளவாறு வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகள் மற்றும் ஊராட்சி கட்டிட விதி 1997 ஆம் ஆண்டு நிறைவு செய்யும் வகையில் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

EXECUTIVE ENGINEER
KANCHIPURAM DIVISION
TAMIL NADU SLUM CLEARANCE BOARD
PLOT No: 17to20, Aranganathan N...

Scanned with CamScanner

12. உத்தேச கட்டிடம் கட்டும் பொழுது பதிவு பெற்ற மின் ஒப்பந்ததாரர்கள் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

முத்திரையிடப்பட்ட வரைபடம் இரண்டு மற்றும் உத்தரவு கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

நிர்வாக பொறியாளர், காஞ்சிபுரம் கோட்டம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்கள் இறுதி ஒப்புதல் பெற உள்ளாட்சியினை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்புமாறு தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கீழ்கதிர்பூர் ஊராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

<u>இணைப்பு:</u> இரண்டு தொகுப்பு வரைபடங்கள்

<u>**நகல்**</u>
நிர்வாக பொறியாளர்,
காஞ்சிபுரம் கோட்டம்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
17-20, அரங்கநாதன் நகர்,
பொன்னேரி கரை,
காஞ்சிபுரம்.

உறுப்பினர் செயலர் (பொ),
காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்
காஞ்சிபுரம்.

EXECUTIVE ENGINEER
KANCHIPURAM DIVISION
TAMIL NADU SLUM CLEARANCE BOAR
PLOT No: 17to20, Aranganathan Nagar
Ponneri Karai, Koneri Kuppam
Kanchipuram-631501

**தனி அலுவலர் கீழ்கதிர்பூர் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)**
**காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை - திரு.வே.ராஜ்குமார்**

**ந.க.எண்.1046/2020/ஆ3** **நாள்.03.03.2020**

---

**பொருள் -** தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிடங்கள் - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - கீழ்கதிர்பூர் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்.3/3A2 & 237/3-ல் 6.99 ஹெக்டேர் (or) 69,900 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தரைதளம் + மூன்று தளங்கள் உள்பட 33 பிளாக்குகளில் 2112 குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அனுமதி பெறப்பட்டுள்ளது - கட்டிடங்கள் கட்ட வரைபடங்களுக்கு கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்.

**பார்வை -**

1. G.O.(Ms).No.92, Revenue Department, Land Disposal Wing, LD5(1) Section, dated.05.02.2019
2. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செ.மு.ந.க.எண்.16317/2016/ஆ2 நாள்.22.06.2017
3. உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடித ந.க.எண்.942/ 2019/காஉதிகு நாள்.18.02.2020
4. மனுதாரர் நிர்வாக பொறியாளர், காஞ்சிபுரம் கோட்டம், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், No.17-20, அரங்கநாதன் நகர், பொன்னேரிகரை, காஞ்சிபுரம்
5. கீழ்கதிர்பூர் ஊராட்சி மன்றம் தீர்மானம் எண்.57 நாள்.03.03.2020

******

**உத்தரவு :-**

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், கீழ்கதிர்பூர் ஊராட்சி மற்றும் கிராமம், பார்வை 1-ல் காணும் அரசாணையில் சர்வே எண்.3/3A2 & 237/3-ல் 6.99 ஹெக்டேர் (or) 69,900 ச.மீ பரப்பளவு கொண்ட புன்செய் அனாதீனம் நிலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு (Tamil Nadu Slum Clearance Board) நில உரிமை மாற்றம் செய்து அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 2-ல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர் காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறைகளின்படி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி அதனை தொடர்ந்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட அனுமதி பெறப்பட்ட மனை இடத்திற்கு **"ABCD"** என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையிடத்தில் சுமார் 71,080 ச.மீ பரப்பளவுடன் (Inculding 33 Block & Puplic Purpose Building) உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட கட்டிட வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண்.**05/2020/காஉதிகு** (அ முதல் ஒ வரை) பார்வை 3-ல் காணும் உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகளின்படி தொழில் நுட்ப அனுமதி ஒப்புதல் பெறப்பட்டு இவ்வலுவலகம் வரப்பெற்றுள்ளது.

EXECUTIVE ENGINEER
KANCHIPURAM DIVISION
TAMIL NADU SLUM CLEARANCE BOARD
PLOT No. 17to20, Aranganathan ...
Ponneri Karai, ...

மேற்படி அதனை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் கடிதத்தில் கட்டிட வரைபடங்களுக்கு தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமாக கட்டிட அனுமதி வழங்குமாறு தெரிவித்துள்ளதற்கிணங்க, சர்வே எண்.3/3A2 & 237/3-ல் 6.99 ஹெக்டேர் (or) 69,900 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தரைதளம் + மூன்று தளங்கள் (Ground Floor, First Floor, Second Floor & Third Floor) உள்பட 33 பிளாக்குகளில் 2112 குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு கிராம ஊராட்சி வரைபட (Building Planning Approvel) அனுமதி கட்டணமாக தொகை **ரூ.28,06,800/-** (ரூபாய் இருபத்தி எட்டு இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூறு மட்டும்) பல்வகை இரசீது எண்:**326** நாள்.02.03.2020-ன்படி பெறப்பட்டுள்ளதாலும், கீழ்கதிர்பூர் ஊராட்சி தீர்மானம் எண்.**57** நாள்.**03.03.2020**-ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட இடத்தில் குடிசை மாற்று வாரியம் மூலமாக கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள கட்டிட வரைபடங்களுக்கு கிராம ஊராட்சியின் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

## // நிபந்தனைகள்//

- குடிசை மாற்று வாரிய குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுமானத்திற்கு (Building Planning Approvel) கட்டிட வரைபட அனுமதி **03.03.2020** முதல் **17.02.2025** வரை ஐந்து ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்.
- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், மனுதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய கிராம ஊராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.
- உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடித ந.க.எண்.942/2019/காஉதிகு நாள்.18.02.2020-ன்படி, செயல்முறை உத்தரவில் தெரிவித்துள்ள சிறப்பு நிபந்தனைகள் (Special Conditions) மற்றும் பொது நிபந்தனைகள் (General Conditions) தவறாது பின்பற்ற வேண்டும்.
- தீயணைப்பு துறையின் தடையின்மை சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் தவறாது கடைப்பிடிக்கப்படவேண்டும்.
- கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் வளர்ச்சிக் கட்டுபாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
- உத்தேச குடியிருப்பு கட்டிட உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
- மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

EXECUTIVE ENGINEER
KANCHIPURAM DIVISION
TAMIL NADU SLUM CLEARANCE BOA[RD]
PLOT No. 17to20, Aranganathan Na[gar]
Ponneri Karai, Koneri Kuppa[m]

//ந.க.எண்.1046/2020/ஆ3//

- ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அலுவலகம் அனுமதி பெறப்பட வேண்டும்.
- மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் உள்ளவாறு அமைவிடம் இருக்க வேண்டும்.
- தனியார் வாகனங்கள் மூலம் கழிவுநீர் வெளியேற்றவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
- மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
- உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
- செப்டிக் டேங்க்கில் " U" Trap அமைத்தல் வேண்டும்.
- உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
- கட்டப்படும் கட்டிடங்கள் வரைபடத்தில் உள்ளவாறு 1973-ம் ஆண்டின் பொது கட்டிட விதிகள் மற்றும் 1997-ம் ஆண்டின் ஊராட்சி கட்டிட விதிகள் ஆகியவை நிறைவு செய்யும் வகையில் கட்டிடம் கட்டப்படவேண்டும்.
- சுற்றுச்சூழல் பாதுகாக்கும் பொருட்டு மனையில் திறந்தவெளி இடங்களில் (Open Area) மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்படவேண்டும்.
- பயிற்சி மைய கட்டிடம் கட்டும் பொழுது பதிவு பெற்ற மின் ஒப்பந்தாரர்கள் மூலம் ஒயரிங் செய்யப்படவேய்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே பயிற்சி மைய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஆதாரத்துகளில் பிற்காலத்தில் தவறு ஏதும் இருப்பது தெரியும் பட்சத்தில் கட்டிட வரைபட அனுமதி இரத்து செய்ய நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தனி அலுவலர்/
கீழ்கதிர்பூர் ஊராட்சி
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

நிர்வாக பொறியாளர்,
காஞ்சிபுரம் கோட்டம்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
No.17-20, அரங்கநாதன் நகர்,
பொன்னேரிகரை, காஞ்சிபுரம்

03/03/2020

நகல் - உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - ஊராட்சி செயலர், கீழ்கதிர்பூர் ஊராட்சி

EXECUTIVE ENGINEER
KANCHIPURAM DIVISION
TAMIL NADU SLUM CLEARANCE BOARD
PLOT No: 17to20, Aranganathan Nagar
Ponneri Karai, Koneri Kuppam
Kanchipuram-631501



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate